**நெழுவ பிரதேச சபை - 2022**
**----------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நெழுவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நெழுவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத நிர்மாண வேலைகளுக்காக ரூபா 2,000,000 இற்கான மூலதன உதவி கடன்பட்டோர் மற்றும் மூலதன செலவுகள் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமையால் அந்த மீதிகளின் பெறுமதி மிகையாக காட்டப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போதும் மற்றும் முன்னைய ஆண்டின் போதும் சபைக்கு கிடைத்திருந்த ரூபா 5,425,850 இற்கான ஒரே தடவையில் பெறும் பணம் வருமானத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளாமல் செலுத்த வேண்டிய வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பில் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத நிர்மாண வேலைகளுக்காக ரூபா 575,000 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பழைய மின் உபகரண மீதித் தொகை ரூபா 161,435 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 535,837 இற்கான நிலையான சொத்துக்கள் வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விரிவான அட்டவணைகள் சமர்ப்பிக்காமையால் ரூபா 540,271 தொகை பெறுமதியான 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | இணங்குகின்றேன் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவுகள் 23 மற்றும் 24 | சபையின் பாதைகள் தொடர்பான விபரங்கள் உள்ளடங்கிய பாதைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்துள்ள கூட்டுத்தொகை ரூபா 146,250 தொகைக்கான வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2005 ஒக்தோபர் 05 | 2022 ஆண்டின் போது 15 மந்திரிமார் சபைக் கூட்டங்களுக்கு | எதிர் காலத்தில் மருத்துவ அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு | வர்த்தமானிக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| திகதிய அதி விஷேட வர்த்தமானியின் பிரிவு 3(1) | சமூகமளிக்காமலும், மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்காமலும் இருந்த போதிலும், சபையினால் ரூபா 690,000 தொகை கொடுப்பனவு ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படும் என. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 5,178,452 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 231,625 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 சேமிப்புக் கணக்குகளில் மீளாய்வாண்டு ஆரம்பம் முதல் ரூபா 3,304,366 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன், அந்த மிகைப் பணத்தை பாதுகாப்பாக நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்வது தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ரூபா 1,000,000 இற்கான பாதுகாப்பு முறிகள் திறக்கப்பட்டதென. | மிகைப் பணம் முதலீடு செய்ய வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 425,000 | 438,883 | 390,772 | 106,204 | 428,000 | 323,167 | 315,910 | 58,093 |
| வாடகை | 7,587,694 | 6,561,510 | 4,366,788 | 4,093,845 | 7,879,600 | 2,664,473 | 2,669,473 | 1,899,123 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 283,600 | 172,430 | 212,725 | - | 285,500 | 165,325 | 553,792 | 40,295 |
| ஏனைய வருமானங்கள் | 3,093,724 | 2,988,203 | 2,986,928 | 222,285 | 3,107,330 | 4,681,741 | 4,612,638 | 221,010 |
| மொத்தம் | 11,390,018 | 10,161,026 | 7,957,213 | 4,422,334 | 11,700,430 | 7,834,706 | 8,151,813 | 2,218,521 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 2,218,521 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அது ரூபா 4,422,334 தொகையாக இருந்தது. | இணங்குகின்றேன் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வாடகை வருமானம் ரூபா 1,899,123 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அது ரூபா 4,093,845 ஆக காணப்பட்டது. | எதிர் காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (இ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/2010/01 கொண்ட சுற்றறிக்கைக்கு இணங்க கடையறைகள் தொடர்பாக அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 17 கடையறைகளுக்குரிய வாடகை உடன்படிக்கைகள் 2017 மற்றும் 2019 ஆண்டுகளின் பின்னர் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட விடயம் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் மின்சார அமைச்சின் மூலம் ரூபா 1,680,000 இற்கான கிரயத்தில் செயற்படுத்தப்பட்ட சூரிய வலுச் சக்தியின் மூலம் மின்சார உற்பத்தி செய்தலூடாக சபைக்கு கிடைக்கும் வருமானத்தின் சரியான தன்மை தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் ஏதும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கும் வருமானம் உரிய முறையில் கணக்கீடு செய்யப்படுகின்றது என. | உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன், பின் தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நெலுவ பிரதேச செயலகத்திற்கு சொந்தமான கபரகல வத்த காணியில் விளையாட்டுத் திடல் நிர்மாணிப்பதற்காக சபையினால் ரூபா 1,164,613 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இந்தக் காணியை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணியை உரித்தாக்குவதற்காக பிரதேச செயலாளருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என. | காணி சபைக்கு உரித்தாக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்கள், செய்பணிகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மாணியத்தின் கீழ் 02 செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக ரூபா 3,000,000 இற்கான ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தச் செயற்திட்டங்களை செயற்படுத்தாமல் கைவிடப்பட்டிருந்தது. | 2022 ஆண்டின் கூறுவிலைகள் சடுதியாக அதிகரித்திருந்தமையால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஏற்பாட்டுத் தொகை போதியளவாக காணப்படவில்லை என. | அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் செயற்திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இஹல மத்தேகம விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்குரிய மண் போக்குவரத்துக்காக ரூபா 54,240 தொகையும், மோட்டார் கிரேடர் மூலம் மண் விரிப்பதற்கு ரூபா 49,978 தொகை போக்குவரத்து செய்யப்பட்ட மண் அடுக்கப்படாமல் இருந்த போதிலும் அதற்காக ரூபா 136,292 ஆக மொத்தம் ரூபா 236,510 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | மண் தொகையினை சுமார் 1Km தூரத்திலிருந்து போக்குவரத்து செய்த போதிலும் அது போதியளவினதாக காணப்படாமையால் மண்ணினை அளவை செய்வதற்காக வாகன அளவை பயன்படுத்தப்பட்டதெனவும், மிகைக் கொடுப்பனவு தடுத்து வைத்தல் பணத்திலிருந்து கழிக்கப்படும் எனவும். | மிகைக் கொடுப்பனவு அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நெலுவ பொது விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்தல் - நிலத்தை செப்பணிடும் நிர்மாண வேலை நிறைவேற்றுவதற்காக வேலை விடயம் 1 இன் கீழ் சபைக்குச் சொந்தமான படுவன்கல தகனசாலை வளவிலிருந்து மண் பேற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக ரூபா 429,592 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | மாதாந்த பொதுக் கூட்ட தீர்மானத்தின் படி படுவன்கல தகனசாலை வளவிலிருந்து பெற்றிருந்த மண் எண்ணிக்கையை ஒப்பந்தக்காரர் போக்குவரத்து செய்திருந்ததென. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நெலுவ பொது விளையாட்டுத் திடல் அபிவிருத்தி செய்தல் - 2021, வடிகால் முறைமை தயாரிதத்ல் (மீதியன ஏற்பாடுகள்) நிரமாண வேலை விடயம் 1.5 இன் கீழ் வடியமைப்பு விடயங்களுக்காக குறிப்பிடப்பட்ட விலை விகிதம் பயன்படுத்தப்படாமையால் ரூபா 256,705 தொகை மற்றும் ஒப்பந்த வேலைக்காக ரூபா 23,493 ஆக ரூபா 280,198 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | ST – 063 விலை விகிதம் மற்றும் Ct - 08 விலை விகிதம் பயன்படுத்தப்பட்டது. | மிகைக்கொடுப்பனவுகள் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | நெலுவ பொது விளையாட்டுத் திடலின் வடிகால் முறைமை தயாரித்தல் கட்டம் II நிர்மாண வேலையின் வேலை விடயம் 1.5 இன் கீழ் வடிவமைப்பு வேலைகளுக்காக நியம விலை விகிதம் பயன்படுத்தப்படாமையால் ரூபா 107,257 தொகை மற்றும் ஒப்பந்த வேலைக்காக ரூபா 11,318 தொகை ஆக மொத்தம் ரூபா 118,575 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | ST – 063 விலை விகிதம் மற்றும் Ct - 08 விலை விகிதம் பயன்படுத்தப்பட்டது. | - மேற்படி - |